# “டெங்கு தடுப்பு நடவடிக்கைகளில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பங்களிப்பு : ஒரு சமூகவியல் ஆய்வு”

**Supervisor**
*Mr. M. Riswan,*
*Lecturer (Prob.),*
*Faculty of Arts and Culture*

**Researcher**
*Miss. ABF. Naseeha,*
*Department of Social Sciences,*
*Faculty of Arts and Culture*

டெங்கு நோயானது இன்று பாரியதொரு சுகாதாரப் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. டெங்கு நோய் என்பது ஒரு தொற்று நோய். மிக அண்மைக்காலமாக இலங்கையில் பல்வேறு பாரிய விளைவுகளை ஏற்படுத்திய நோயாக டெங்கு காணப்படுகின்றது. இது இலங்கையின் பல்வேறு பகுதிகளில் தீவிரமான பரவுகையைக் கொண்டுயிருப்பதுடன் ஒரு சவால்மிக்க சுகாதாரப் பிரட்சினையாகவும் இருந்து வருகின்றது. நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளில் அதாவது உலக மக்கள் தொகையில் 2.5 பில்லியன் மக்கள் டெங்கு நோய்த் தொற்றுக்கு ஆளாகியுள்ளனர். இலங்கையில் அம்பாறை மாவட்டத்திலுள்ள கல்முனை கரையோர பிராந்தியமானது மிக அண்மைக்காலத்தில் டெங்க நோயால் வெகுவாகப் பாதிக்கப்பட்டுயிருந்தது. டெங்கு நோய் தடுப்பு நடவடிக்கைகளில் பல்வேறு தாபனங்கள், அமைப்புக்கள் ஈடுபட்டுவருகின்ற அதேவேளை கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை டெங்கு தடுப்பு நடவடிக்கைகளில் எத்தகைய பங்களிப்பினைக் கொண்டுள்ளது என்பதை இவ்வாய்வுக் கட்டுரை நோக்கியுள்ளது. மேலும், கல்முனை பிராந்திய சுகாதார பிரிவில் டெங்கு நோயின் பரவுகை, அதற்க்கான காரணங்கள், நோய் பரவுதலை கட்டுப்படுத்தக்கூடிய உபாயங்களை முன்மொழிதல் போன்றவற்றை நோக்கமாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வானது அடிப்படையில் பண்புசார், அளவுசார் தகவல்களையும், தரவுகளையும் கொண்டு பகுப்பாய்வினை மேற்க்கொண்டுள்ளது. இவ்வாய்விற்க்கான தரவுகளும், தகவல்களும் முதலாம் நிலைத் தரவுகள், இரண்டாம் நிலைத் தரவுகள் ஆகிய மூலகங்களிலிருந்து பெறப்பட்டுள்ளன. இறுதியாக, டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவதில் கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பங்களிப்பானது சிறப்பாகக் காணப்படுகின்றது என்பதை இவ்வாய்வு முடிவாக உரைக்கின்றது.

***Key words:*** டெங்கு (Dengue), டெங்குக் கட்டுப்படுத்தல் (Dengue Prevention)